www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V9SS

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

-----

வகுப்பு 9

காலம்: 3.00 மணி — சமூக அறிவியல் — மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1) மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு

2) சுமேரியரின் எழுத்துமுறை ............ ஆகும்.
அ) பிக்டோகிராபி ஆ) ஹைறோகிளிபிக் இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்

3) காடாக இருந்த இடங்களை வேளாண் நிலங்களாக மாற்றுதல் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பெருமைகளுக்கு உரிய சோழன் யார்?
அ) கரிகாலன் ஆ) முதலாம் இராஜராஜன்
இ) குலோத்துங்கன் ஈ) முதலாம் இராஜேந்திரன்

4) மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர்
அ) மார்க்கோபோலோ ஆ) ஃபாஹியான் இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்

5) கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ............ ஆகும்.
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள்
இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்

6) பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு
அ) புவி மேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

7) ............ல் அரித்தல் செய்கையினால் சர்க்குகள் உருவாக்கப்படுகின்றன.
அ) காற்று ஆ) பனியாறு இ) ஆறு ஈ) நிலத்தடிநீர்

8) ............ வானொலி அலைகளை பிரதிபலிக்கிறது.
அ) வெளியடுக்கு ஆ) அயனஅடுக்கு இ) இடையடுக்கு ஈ) மீள்அடுக்கு

9) கடலடி மலைத்தொடர் உருவாக காரணம்
அ) புவித்தட்டுகள் இணைதல் ஆ) புவித்தட்டுகள் விலகுதல்
இ) புவித்தட்டுகளின் பக்கவாட்டு இயக்கம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

10) புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த்தொகுதி
அ) துந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்

11) மக்களாட்சியில் இறுதி அதிகாரம் பெற்றவர்கள்
அ) நாடாளுமன்றம் ஆ) மக்கள் இ) அமைச்சரவை ஈ) குடியரசுத்தலைவர்

12) இந்திய தேர்தல் ஆணையம் ஒரு
அ) சுதந்திரமான அமைப்பு ஆ) சட்டப்பூர்வ அமைப்பு
இ) தனியார் அமைப்பு ஈ) பொதுநிறுவனம்

13) இன ஒதுக்கல் எனும் கொள்கையைப் பின்பற்றிய நாடு ............
அ) தென்சூடான் ஆ) தென் ஆப்பிரிக்கா இ) நைஜீரியா ஈ) எகிப்து

14) இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தியைச் செய்யும் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) மேற்கு வங்காளம் இ) கேரளா ஈ) ஆந்திரப்பிரதேசம்

## பகுதி - II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **10×2=20**
**(வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளி)**

15) பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.
16) சிகுராட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
17) மும்மணிகள் (திரிரத்னா) - இச்சொல்லை விளக்கிக் கூறு.
18) புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.
19) புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
20) காற்றின் அரித்தல் செய்கையால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்களை பட்டியலிடுக.
21) மழைப்பொழிவின் வகைகள் யாவை?
22) உயிரினப் பன்மை என்றால் என்ன?
23) நீரியல் சுழற்சி என்றால் என்ன?
24) நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.
25) இந்தியாவில் தேர்தல் முறை பற்றி எழுதுக.
26) குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா. அறிவித்துள்ளவை யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27) பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் யாவை?

28) குழந்தைகளையும் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக்குழுக்களாக கருதக்கூடாது?

## பகுதி - III

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **10×5=50**

**(வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
- i) ............... ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடம்.
- ii) புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் ............... உள்ளது.
- iii) ............... வம்சத்தினரின் ஆட்சியின் போது தான் பௌத்தம் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு வருகை தந்தது.
- iv) மிகப்பரந்த புவிசூழ்நிலை மண்டலத்தை ............... என்கிறோம்.
- v) தேசிய வாக்காளர் தினம் அனுசரிக்கப்படும் நாள் ...............

30) **பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| i) | அரிக்கமேடு | - | ஆஸ்திரேலியா |
| ii) | அக்ரோபொலிஸ் | - | 2005 |
| iii) | வில்லி வில்லி | - | சங்ககால துறைமுகம் |
| iv) | தேசியக்கட்சி | - | பாதுகாக்கப்பட்ட நகரம் |
| v) | இந்து வாரிசுரிமைச் சட்டம் | - | ஏழு |

31) **வேறுபடுத்துக:**

அ) வானிலை மற்றும் காலநிலை

ஆ) இயற்சிதைவு மற்றும் வேதியியல் சிதைவு

**காரணம் கூறுக:** வெப்பசலன மழை 4 மணி மழை என்று அழைக்கப்படுகிறது.

32) சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.

33) சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?

34) புவி அமைப்பை விவரி.

35) மேகங்களின் வகைகளை விவரி.

36) கடல் வளங்கள் மனிதகுலத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை?

37) சூழ்நிலைமண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.

38) இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான நிபந்தனைகளை விளக்குக.

39) அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?

40) புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள் வேறுபடுத்துக.

41) பொதுத்துறை - தனியார் துறை வேறுபடுத்துக.

42) **கீழ்க்காணும் இடங்களை தென்னிந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**

(அ) கொற்கை (ஆ) அரிக்கமேடு (இ) காஞ்சி (ஈ) சென்னை (உ) மதுரை

## பகுதி - IV

**இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **2×8=16**

43) அ) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக. **(அல்லது)**

ஆ) கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கிக் கூறு.

44) **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறித்துக் காட்டுக:**

அ) (i) எகிப்து (ii) இந்தியப் பெருங்கடல்
(iii) மெசபடோமியா (iv) பசிபிக் பெருங்கடல்
(v) சீனா (vi) இத்தாலி
(vii) லண்டன் (viii) கருங்கடல்

**(அல்லது)**

ஆ) (i) பூமத்தியரேகை (ii) பசிபிக் நெருப்பு வளையம்
(iii) இமயமலை (iv) வெப்ப பாலைவனம்
(v) ஆல்ப்ஸ் மலை (vi) ஆர்டிக் பெருங்கடல்
(vii) லேப்ரடார் நீரோட்டம் (viii) கலிபோர்னியா

------------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com